www.Padasalai.Net www.CBSEtips.in

வகுப்பு : 6

தேர்வு எண் | | | | | | |

# முதல் பருவம் - தொகுத்தறி மதிப்பீடு (SA)- 2023 - 24

## தமிழ்

நேரம் : 2.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 60

14X1=14

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மக்களுக்கு மகிழ்ச்சி தருவது --------

அ) ஊக்கமின்மை ஆ) அறிவுடைய மக்கள் இ) வன்சொல் ஈ) சிறிய செயல்

2. 'நீக்குதல்' என்னும் சொல்லின் எதிர்ச்சொல் -------

அ) போக்குதல் ஆ) தள்ளுதல் இ) அழித்தல் ஈ) சேர்த்தல்

3. மனிதன் எப்போதும் உண்மையையே ------

அ) உரைக்கின்றான் ஆ) உழைக்கின்றான் இ) உறைகின்றான் ஈ) உரைகின்றான்

4. முதல் எழுத்துகள் இடம்பெறாத சொல்லைத் தேர்க.

அ) ஆம் ஆ) இல் இ) குருவி ஈ) ஊர்

5. <u>காலிங்பெல்லை</u> அழுத்தினான் கணியன். இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்

அ) எந்திரமனிதன் ஆ) அழைப்பு மணி இ) இயந்திரம் ஈ) கணினி

6. 'தனிநிலை' என அழைக்கப்படுவது ------

அ) உயிர் எழுத்து ஆ) உயிர் மெய் இ) மெய் எழுத்து ஈ) ஆய்தம்

7. 'சரணாலயம்' என்பதன் வேறு பெயர்

அ) பறவை ஆ) வாழ்விடம் இ) வலசைபோதல் ஈ) பணி

8. ஏற்றத்தாழ்வற்ற ------- அமைய வேண்டும்.

அ) சமூகம் ஆ) நாடு இ) வீடு ஈ) தெரு

9. 'சீரிளமை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது --------

அ) சிறு + இளமை ஆ) சீர்மை + இளமை இ) சீரி + இளமை ஈ) சீற் + இளமை

10. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி ------

அ) துருவப்பகுதி ஆ) இமயமலை இ) இந்தியா ஈ) தமிழ்நாடு

11. நுட்பமாகச் சிந்தித்து அறிவது ------

அ) நூலறிவு ஆ) நுண்ணறிவு இ) சிற்றறிவு ஈ) பட்டறிவு

12. 'ஒருமித்துச் செயல்படு' என்ற அறிவியல் ஆத்திசூடி தொடரிலுள்ள ஒருமித்து என்பதன் பொருள்

அ) ஒன்றுபட்டு ஆ) முடிந்தவரை இ) மருந்து ஈ) மாறுபட்டு

13. தாய்மொழியில் படித்தால் ------- அடையலாம்.

அ) பன்மை ஆ) மேன்மை இ) பொறுமை ஈ) சிறுமை

14. 'அவ்வுருவம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது --------

அ) அவ்வு + ருவம் ஆ) அ + உருவம் இ) அவ் + வுருவம் ஈ) அ + வுருவம்

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 5x2=10

15. மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது எது?

16. சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்ள உங்கள் பொறுப்பு ஒன்றை எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

17. செயற்கைக்கோள் எவற்றுக்கு எல்லாம் பயன்படுகிறது?
18. வலசையின் போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?
19. மெய்யெழுத்துகளை மூவகை இனங்களாக வகைப்படுத்தி எழுதுக.
20. முதல் எழுத்துகள் என்பவை யாவை?
21. செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவவேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?
22. பாரதியார் இயற்கையின் மீது கொண்டுள்ள விருப்பம் குறித்து எழுதுக.

**III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 4x3=12

23. கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுவதன் காரணம் என்ன?
24. மொழிக்கு முதலில் வரும் உயிர்மெய் எழுத்துகள் யாவை?
25. எந்திரமனிதனின் பயன்களை விளக்குக.
26. சொற்களில் ஆய்த எழுத்து எவ்வாறு இடம் பெறும்?
27. தமிழ் இனியமொழி என்பதற்கான காரணம் தருக.
28. சமூக வளர்ச்சிக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?

**IV. அடிபிறழாமல் எழுதுக.** 3+2=5

29. 'மாமழை போற்றுதும்' – எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.
30. 'அன்பிலார்' – எனத் தொடங்கும் திருக்குறள்.

**V. விடையளிக்கவும்:** 2x4=8

31. அ) பறவை இனங்கள் அழியாமல் காப்பாற்றப்பட நாம் செய்ய வேண்டியவை பற்றிச் சிந்தித்து எழுதுக.

(அல்லது)

ஆ) எவற்றுக்குப் புதிய கண்டுபிடிப்புகள் தேவை என்பது பற்றிச் சிந்தித்து எழுதுக.

32. அ) அத்தையின் 'கனவு பலித்தது' கடிதக் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) சுதந்திர இந்தியா அடைந்த வெற்றிகளாக அப்துல்கலாம் எவற்றைக் குறிப்பிடுகிறார்?

33. **ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.** 1x6=6

விடுப்பு விண்ணப்பம் (அல்லது) அறிவியல் ஆக்கங்கள்.

**VI. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5x1=5

34. வரிசை மாறியுள்ள சொற்களைச் சரியான வரிசையில் அமைத்து எழுதுக.

மனிதர் இந்தியாவின் டாக்டர் சலீம் அலி பறவை.

35. கலைச்சொல் எழுதுக.

Intelligence.

36. பரிபாடல் – இச்சொல்லில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை இரண்டினை எழுதுக.
37. பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

முத்து தம் ------- காரணமாக ஊருக்குச் சென்றார். (பனி/ பணி)

38. கலைந்துள்ள சொல்லை முறைப்படுத்தி எழுதுக.

மத்ருதும்வ.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com